**சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

# பதவி மற்றும் வெற்றிடம்

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 1939 பணி உதவியாளர் (கனிஷ்ட) பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.**

**பதவி** : சுகாதார பணி உதவியாளர் (கனிஷ்ட)

**சேவை தரம்** : ஆரம்ப தேர்ச்சி அல்லாத சேவைத் தரம் (PL 01 – 2006 -ஏ)

**சம்பள அளவு** : ரூபா 40,000-10x450-10x490-10x540-12x590 - ரூபா 61,880 (PL 01 – 2006 – (ஏ)) (அரச நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 10/2025 அட்டவணைக்கு (II) அமைய) – (2026 ஆம் ஆண்டின் ஆரம்பச் சம்பளம் ரூபா 38,863 ஆகும்)

**கல்வித் தகைமைகள் :** கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத தடவைக்கு உட்பட்டவர்களில் இரு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். (நேர்முகப் பரீட்சையில் பங்கேற்கும்போது பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து பெற்ற கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.)

**அல்லது**

பதவிக்குத் தொடர்புடைய துறையில் NVQ 3 அளவில் அல்லது அதற்கு மேற்பட்ட அளவை பெற்றிருத்தல்

**உடல் தகைமை** : அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது** : 18 வயதுக்கு குறையாத – 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

**ஆட்சேர்ப்பு தரம்** : ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவது சுகாதார பணி உதவியாளர் (கனிஷ்ட) III ஆம் தரத்துக்கு மாத்திரமாகும்.

| புள்ளிகள் வழங்கும் பிரதான துறை | அதிகபட்ச புள்ளி அளவு 100 | தேர்வு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளி அளவு |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமை | 40 | பொருந்தாது. அதிக புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடத்திற்கு அமைய தேர்வு செய்யப்படும். |
| அனுபவம் | 55 | |
| நேர்முகப்பரீட்சையில் காண்பிக்கும் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

**பணியமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

(i) தற்போது வெற்றிடம் இருக்கும் மாவட்டங்களானது கொழும்பு, கண்டி, நுவரெலியா, காலி, யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை மற்றும் அநுராதபுரம் என்பதோடு பணியமர்த்தப்படும் அதிகாரிகள் பணியாற்றுவதற்கு விரும்பும் மேலுள்ள மாவட்டங்கள் இடையே 3 மாவட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படி குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு, திறமை மற்றும் இருக்கின்ற வெற்றிட அளவின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் மாவட்டத்தில் கட்டாயம் 5 ஆண்டுகள் பணியாற்றுதல் வேண்டும். அந்தக் காலத்தில் இடமாற்றம் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ii) மேலும் சேவை தேவை அடிப்படையில் நாட்டின் எந்த ஒரு இடத்திலும் பணியாற்றுவதற்கு கடப்பாடு பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) நியமிக்கப்படும் பதவி நிரந்தரமானது. தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியம் தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான முடிவுகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தேர்வு செய்யப்படும் அதிகாரிகள் விதவை மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் அதற்காக பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் மூன்று ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது என்பதோடு பணியமர்த்தப்பட்டு மூன்று (03) ஆண்டுகளுக்குள் முதலாவது செயல்திறன் சோதனையில் சித்தி பெறுதல் வேண்டும்.

(v) அரச நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 18/2020 இற்கு அமைய மற்றும் அது சார்ந்த சுற்றுநிருபத்திற்கு அமைய பதவியில் இணைந்த 05 ஆண்டுகளுக்குள் குறித்த அரச மொழி தொடர்பில் தேர்ச்சியை பெறுதல் வேண்டும்.

(vi) அரச சேவை ஆணைக்குழு நடைமுறை விதிமுறைகளுக்கும், இலங்கை சனநாயகச் சோசலிச குடியரசின் நிறுவனக் கோவைக்கும், அரச நிதி ஒழுங்குமுறைகளுக்கும், அரசினால் வழங்கப்படும் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் ஆரம்ப தேர்ச்சி அல்லாத சேவைத் தரம் (PL 01 – 2006 -ஏ) இற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கும் (முழுமையான விபரத்தை கீழுள்ள இணையதள இணைப்பின் மூலல் பெற்றுக்கொள்ள முடியும்.) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வழங்கப்படும் சுற்றுநிருபம் மற்றும் பொது ஏற்பாடுகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(vii) விண்ணப்பதாரர் ஒருவர் நியமனத்தை பெறுவதற்கு தகுதி பெற்ற மொழி ஊடகமானது, அவர்களின் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி ஊடகமாகும்.

(viii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் எண்ணிக்கை, பதவிக்காக நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படும் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிட எண்ணிக்கை ஒன்று அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாது இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது.

**விண்ணப்பிக்கும் முறை :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பப் படிவத்தை இணையதளத்தில் இருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய வெள்ளை A4 காகிதத்தில் தயாரித்து தமது மொழி ஊடகத்திலேயே தெளிவாக தமது கையெழுத்திலேயே பூர்த்தி செய்து விண்ணப்பங்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் “சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் ஆரம்ப தேர்ச்சி அல்லாத (PL 01 – 2006 -ஏ) சேவைத் தரம் சுகாதார பணி உதவியாளர் (கனிஷ்ட) பதவிக்கான ஆட்சேர்ப்பு – 2025” என்று குறிப்பிட்டு 2026.01.12 ஆம் திகதிக்கு முன்னர் அல்லது அன்றைய தினத்திற்கு கிடைக்கும் வகையில் பணிப்பாளர் (நிர்வாகம்) 04 ஆவது கிளை, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, “சுவசிறிபாய”, இலக்கம் 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (www.health.gov.lk என்ற இணையதளத்தில் இருந்து அல்லது கீழுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து விண்ணப்பப் படிவத்தை பெற முடியும். அதனை A4 காகிதத்தில் அச்சிட்டு விண்ணப்பப் படிவத்தை நிரப்பி அனுப்ப வேண்டும்.)

**செயலாளர், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**
**சுவசிறிபாய**
**இலக்கம் 385,**
**சங்கைக்குரிய பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை,**
**கொழும்பு 10.**

tamilguru.lk